# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

## தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Issue 35 April 2023 Issue 4








08.04.2023 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் பங்கேற்ற மாநில நிர்வாகிகள், கொடியேற்ற நிகழ்வு மற்றும் பாராட்டுரை

தனிப்பிரதி விலை ரூ.10/-
Per Copy Rs.10/-

ஆண்டு சந்தா ரூ.120/-
Annual Subscription Rs.120/-

## TNROA சார்பில் 23.03.2023 ஒட்டுமொத்த தற்செயல் விடுப்புப் போராட்டம் குறித்து நிர்வாகிகள் பரப்புரை



திண்டுக்கல் மாவட்டத்தில் மாநிலத் தலைவர் தோழர். எம்பி முருகையன்




விழுப்புரம் மாவட்டம் சார்பாக மாநிலப் பொதுச் செயலாளர் தோழர். சங்கரலிங்கம் தலைமையில் மாநிலத் துணைத் தலைவர் தோழர். மணிகண்டன் முன்னிலையில் வானூர் வட்டத்தில் நடைபெற்ற பிரச்சாரம்



சேலம் மாவட்டம், சங்ககிரி பிரச்சார இயக்கத்தில் மாநிலத் துணைத் தலைவர் தோழர். கு. குமரேசன் பரப்புரை

தலையங்கம்

# வாக்குறுதிகள் காக்கப்பட வேண்டும்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தூத்துக்குடி மத்திய செயற்குழு கூட்டத்தின் ஒருமனதாக தீர்மானத்தின்படி வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்ற 10.05.2023 அன்று சென்னை சேப்பாக்கம் வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் ஆயிரக்கணக்கான வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொள்ளும் 'தொடர் காத்திருப்பு போராட்டம்" நடைபெற உள்ளது.

வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் தலைமையில் அரசு மட்டத்திலான பேச்சுவார்த்தையில் அனைத்து கோரிக்கைகளும் ஏற்கப்பட்டு எழுத்துபூர்வமான முடிவுகள் வழங்கப்பட்டும் முக்கிய கோரிக்கைகள் இழுத்தடுப்பு செய்யப்படுவதை கருத்தில் கொண்டே மத்திய செயற்குழு சரியான முடிவினை எட்டி உள்ளது.

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி 2023 மார்ச் முதல் வாரத்தில் போராட்ட அறிவிப்பு வெளியான போது மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் "துணை ஆட்சியர் பதவி உயர்வு 20 நாட்களில் வழங்கப்படும்" என ஊடங்களில் அறிவித்தார். ஆகஸ்ட் 2022ல் நடைபெற்ற அரசு மட்டத்திலான பேச்சுவார்த்தையில் ஏற்கப்பட்ட பல கோரிக்கைகள் உரிய காலத்தில் நிறைவேற்றப்படாதது, அரசின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்யதுள்ளது.

துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியலில் நான்கு ஆண்டு காலதாமதம் காரணமாக பல அலுவலர்கள் வட்டாட்சியர் நிலையிலேயே ஓய்வு பெற்ற ஓய்வூதியப் பலன்களின் சரி செய்ய இயலாத பாதிப்பிற்கு ஆளாகி உள்ளனர். அதேபோன்று பிற துறை மற்றும் அரசு நிறுவனங்களில் உள்ள பல பணியிடங்களை நிரந்தரமாக இழக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. மாண்பமை உச்சநீதிமன்றத்தின் 2019ஆம் ஆண்டு தீர்ப்புரையின்படி துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தின் காரணமாக பணியிறக்கம் பெறும் அலுவலர்களின் பணிப் பாதுகாப்பு குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சுமூக உடன்பாடு எட்டப்பட்ட நிலையிலும், கடந்த 6 மாதங்களாக புள்ளி விவரங்கள் தொகுப்பதிலேயே ஆணையரகத்தால் காலம் கடத்தப்படுகிறது.

இளநிலை வருவாய் ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்றத்திற்கான அரசாணை வெளியிடப்பட்டு 7 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும்கூட விதித் திருத்தம் மேற்கொள்ளப்படாததன் காரணமாக கோரிக்கையின் நோக்கம் முழுமையாக நிறைவேறாமல் உள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பணித்தன்மை மற்றும் பணிப்பளுவை கருத்தில் கொண்டு மேம்படுத்த ஊதியம், தனி ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பது அரசால் நெடுங்காலமாக ஏற்கப்படாமல் உள்ளது.

அலுவலக உதவியாளர், இரவு காவலர் பணியிடங்கள் நிரந்தர அடிப்படையில் நிரப்பிட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 10 நாட்கள் காலவரையற்ற போராட்டத்தின்போது அரசு கடிதம் பெற்று, கடந்த நவம்பர் 2022ல் இப்பணியிடங்களை நிரப்பிட "தடையேறுதம் இல்லை" என மீள அரசு கடிதம் வழங்கியும், இதில் காலதாமதம் செய்யப்படுவது எதற்காக?

வருவாய்த்துறை அலுவலர்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த மாதம் தமிழகத்தின் அனைத்து மாவட்டம் மற்றும் வட்டத் தலைநகரில் மாலை 1 மணி நேரம் வெளிநடப்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம், அதனைத் தொடர்ந்து 24.3.2023 அன்று தமிழகத்தில் உள்ள 12500 அலுலவர்கள் ஒட்டுமொத்த தற்செயல்விடுப்பு போராட்டத்தில் தன்னெழுச்சியாக கலந்து கொண்ட நிலையிலும் கூட அரசு ஊழியர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள தவறி உள்ளது.

ஜாக்டோ ஜியோ அமைப்பின் சார்பில் பங்களிப்பு ஓய்வூதியம் இரத்து, மத்திய அரசிற்கு இணையாக அகவிலைப்படி உயர்வு, ஈட்டிய விடுப்பு ஒப்படை ஊதியம் வழங்குதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த மாதம் "கோட்டை முற்றுகை போராட்டம்" அறிவிக்கப்பட்ட நிலையில், மூன்று அமைச்சர்களின் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்பட்டதன் காரணமாக போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் சட்டமன்றத்தில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகள் குறித்து அறிவிப்பார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஏமாற்றமே மிஞ்சியது.

எனவே, அரசு தனது வாக்குறுதிகளை காக்க வேண்டும். இல்லையெனில் பேராட்டம் களம் தவிர ஊழியர்களுக்கு வேறுவழியில்லை என்பதை அரசு உணர வேண்டும்.

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

*(அரசாணை எண்.2141, பொதுத் (பணி-அ) துறை, நாள் : 6.10.66ன்படி அங்கீகரிக்கப்பட்டது)*

**THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION**

***மாநில மையம்***

*க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*


# மத்திய செயற்குழு கூட்ட முடிவுகள் - தூத்துக்குடி

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டம் 08.04.2023 அன்று தூத்துக்குடி மாநகரில் ராஜம் மஹாலில் மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் கடந்தகால நடவடிக்கைகளை எடுத்துரைத்தார். மத்திய செயற்குழு கூட்டத்தின் முதல் நிகழ்வாக சங்கக் கொடியினை மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் ஏற்றி வைத்தார். தூத்துக்குடி மாவட்டத் தலைவர் திரு.அ.சுவாமிநாதன் வரவேற்புரை ஆற்றினார்; அஞ்சலி தீர்மானத்தை மாநிலச் செயலாளர் திரு.எம்.எஸ்.அன்பழகன் முன்மொழிந்தார்.

கடந்த 26.11.2022 அன்று சென்னையில் நடைபெற்ற மத்திய செயற்குழுவிற்கு பின்பாக இயற்கை எய்திய விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த வட்டாட்சியர் திரு.வெங்கடசுப்ரமணியன், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த வட்டாட்சியர் திரு.அதியமான் மற்றும் முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் திரு.சாமிநாதன், திரு.வெங்கடேசன், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தட்டச்சர் திருமதி.ஜோதி, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த வட்டாட்சியர் திரு.ரவீந்திரன் ஞானராஜ் மற்றும் துணை வட்டாட்சியர் திரு.ராம்குமார், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.வசந்தி, மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த பதிவறை எழுத்தர் திரு.ஜயப்பன், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பதிவறை எழுத்தர் திரு.இராதாகிருஷ்ணன், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த பதிவறை எழுத்தர் திரு.தண்டபானி, அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலக உதவியாளர் திரு.சந்திரசேகரன், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.குணசீலன், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த துணை ஆட்சியர் திரு.ஜோதி, வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலக உதவியாளர் திரு.சசிக்குமார் மற்றும் பல்வேறு இயற்கை சீற்றங்களில் உயிரிழந்தவர்களுக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன்** தனது தலைமை உரையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 24.01.2023 அன்று சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற பெருந்திரள் முறையீடு போராட்டம், 09.03.2023 அன்று அனைத்து மாவட்ட / வட்ட தலைநகரங்களில் நடைபெற்ற பணிப் புறக்கணிப்பு ஆர்ப்பாட்டம் ஆகியவற்றில் 38 மாவட்ட மையங்களும் விடுதலின்றி பங்கேற்றது அரசின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளதாக தெரிவித்தார். மேலும் 23.03.2023 அன்று நடைபெற்ற ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு போராட்டத்தில் அனைத்து மாவட்டங்களின் சார்பிலும் மாநிலம் முழுவதும் 12500-க்கும் மேற்பட்ட ஊழியர் பங்குபெற்றதன் மூலம் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நமது கோரிக்கைகள்

தொடர்பான பணிகள் வேகமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். கடந்த நான்கு ஆண்டுகளாக துணை ஆட்சியர் பட்டியல் வெளியிடப்படாததால் வருவாய்த்துறையில் அனைத்து நிலைகளிலும் பதவி உயர்வில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது என்றும், ஆனால் நேரடி நியமனத்தின் மூலம் துணை ஆட்சியர்கள் ஒவ்வொரு ஆண்டும் விடுதலின்றி தொடர்ச்சியாக பணியமர்த்தப்பட்டு வருவது ஏற்புடையதாக இல்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

வருவாய்த்துறையில் பணிபுரிந்து வரும் பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பணியிறக்கத்தினை தவிர்த்திட தொடர் இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேலும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் கடந்த 16.08.2022 மற்றும் 01.11.2022 ஆகிய தேதிகளில் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உயர் அலுவலர்களுடனான பேச்சுவார்த்தையின்போது மாநில மையத்தின் சார்பில் வலுவாக எடுத்துரைக்கப்பட்டதன் அடிப்படையில் 13 ஆண்டுகள் பணி முடித்த பட்டதாரி அல்லாத அலுவலர்களுக்கு துணை வட்டாட்சியர்களாக பதவி உயர்வு அளித்திட அரசு மட்டத்தில் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் இதற்கான புள்ளிவிவரங்களை மாவட்டங்களிலிருந்து பெறுவதில் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் சுணக்க நிலை காணப்படுகிறதென்றும், எனவே விரைந்து புள்ளிவிவரங்களை பெற்று ஆணை பிறப்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் காரணமாக எந்தவொரு அலுவலருக்கும் பாதிப்பில்லாத வகையில் நடவடிக்கை எடுத்திட அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதையும் நினைவு கூர்ந்தார். நமது இயக்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட தொடர் இயக்க நடவடிக்கைகளின் மூலமாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர், இரவுக்காவலர் மற்றும் மசால்சி ஆகிய அடிப்படை பணியிடங்களை நிரப்பிட அரசு மட்டத்தில் இரண்டு கடிதங்கள் பெறப்பட்டும், இதுவரை வருவாய் நிர்வாக ஆணையரகத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

மாநில மையத்தின் தொடர் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர்மாற்றம் செய்து 2016-ம்ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு ஏழு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை விதித்திருத்தம் வெளியிடப்படாமல் தொடர் காலதாமதம் செய்வது ஏற்புடையதல்ல என்றும், எனவே இதில் மேலும் காலம் தாழ்த்தாது ஒருமாத காலத்திற்குள் உரிய விதி திருத்தங்களை வெளியிட அரசுக்கு தொடர் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் மாநில குடிமைப்பணியில் (State Civil Service) வருவாய்த்துறையை பாதிக்கும் எந்த மாற்றத்தையும் மேற்கொள்ள மாநில மையம் ஒருபோதும் அனுமதிக்காது எனவும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநில குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மற்றும் மாநகராட்சிகள் போன்ற இதர துறைகளில் வருவாய்த்துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் ஒவ்வொன்றாக பிற துறை பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டு வருவதாகவும், எனவே இதனை தவிர்த்திட கடந்த நான்காண்டுகளாக வெளியிடப்படாமல் உள்ள துணை ஆட்சியர் பட்டியலை உடனடியாக வெளியிட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தொடர் நடவடிக்கையின் காரணமாக 10.03.2020-க்கு முன்னர் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத்தேர்வு பாகம்-1ல் தேர்ச்சி பெற்றுள்ள வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஊக்க ஊதியம் அளித்திடும் பொருட்டு அரசுக்கடிதம் பெறப்பட்டுள்ளது என்றும், மேலும் சென்னை, கரூர், பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 39 இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோருக்கு சென்னை மற்றும்

திருச்சியில் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதனால் மேற்கண்ட 39 அலுவலர்களும் 2023-ம் ஆண்டில் முதுநிலை வருவாய் ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெறும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

தற்போது ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகள் ஆகியவை பள்ளிக் கல்வித்துறையின் கட்டுப்பாட்டிலும், நியாயவிலைக் கடைகள் அனைத்தும் ஒரே துறையின் கீழ் கொண்டுவரப்படும் என்றும், சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆதிதிராவிடர் நலத்துறையில் உள்ள தனி வட்டாட்சியர் பணியிடங்கள் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு பிரிவின் கீழ் செயல்பட்டுவரும் வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் உள்ளிட்ட 1000-த்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் பறிபோகும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட நடவடிக்கையின் காரணமாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைக்கு ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள பணியிடங்களை குறைப்பதற்கு சங்கம் ஒருபோதும் அனுமதிக்காது என்றும், தேவைப்பட்டால் கடுமையான இயக்க நடவடிக்கைகளின் மூலம் அனைத்து பணியிடங்களையும் பாதுகாத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

பேரிடர் மேலண்மைப் பிரிவில் செயல்பட்டு வந்த ஒரு முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்கள் ஆகியவை எவ்வித முன்னறிவிப்புமின்றி கடந்த 31.03.2023 பிற்பகல் முதல் கலைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது வருவாய்த்துறை அலுவலர்களிடைய மிகுந்த கொந்தளிப்பான சூழ்நிலையினை உருவாக்கியுள்ளது என்றும், ஏற்கனவே வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் அலுவலர்கள் மிகுந்த பணிச்சுமையுடன் பணிபுரிந்து வரும் சூழலில் சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மேற்கண்ட பணியிடத்தைக் கலைத்துவிட்டு மீண்டும் அதே பணியிடத்தில் அலுவலர்கள் மாற்றுப்பணி என்ற பெயரில் பணியமர்த்தப்பட்டு வருவது ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே மேற்கண்ட பணியிடங்களை மீண்டும் பெறுவதற்கு தொடர் இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகிய நிலையில் மாவட்ட மாறுதல் கோரி மிகுதியான விண்ணப்பங்கள் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதால் அனைவருக்கும் பணிமாறுதல் ஆணையினை விரைந்து வழங்கிட வருவாய் நிர்வாக ஆணையரகத்திடம் வலியுறுத்துவது, மேலும் நீதிமன்ற வழக்கு தொடர்பாக உயர் நீதிமன்றம் மற்றும் பல்வேறு மாவட்ட நீதிமன்றங்களுக்கு செல்லும் வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்துவரும் பிரச்சனைகள் மற்றும் அரசு வழக்குரைஞர்களின் செயல்பாடுகள் ஆகியவை குறித்து உயர் நீதிமன்ற பதிவாளரிடம் வலியுறுத்துதல் ஆகிய பணிகள் விரைந்து மாநில மையத்தால் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்தார்.

புதிய ஓய்வூதியத் திட்டத்தினை இரத்து செய்து மீண்டும் பழைய ஓய்வூதியத்தை பெறுதல், நிறுத்தம் செய்யப்பட்டுள்ள ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு சலுகையினை மீண்டும் வழங்கிடக் கோருதல் மற்றும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான அகவிலைப்படி உயர்வினை அளித்திடக் கோருதல் உள்ளிட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ - ஜியோ பேரமைப்பு முன்னெடுக்கும் அனைத்து வகையான போராட்டங்களிலும் வருவாய்த்துறை அலுவலர்கள் தொடர்ந்து பங்கெடுக்க வேண்டுமென்றும், ஜாக்டோ - ஜியோ பேரமைப்பினால் மட்டுமே மேற்கண்ட வாழ்வாதார கோரிக்கைகளை வென்றெடுத்திட இயலும் என்பதையும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாவட்டம் சார்ந்த பிரச்சனைகளான தேனி மாவட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் இடையேயான பிரச்சனை, சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட பிரச்சனைகள் குறித்து மாநில மையத்தால் தொடர் வழிகாட்டுதல் வழங்கப்பட்டு தற்போது மேற்கண்ட மாவட்டங்களில் பிரச்சனைகள் ஓரளவு சரிசெய்யப்பட்டுள்ளதென்றும், தேவைப்பட்டால் மேற்கண்ட மாவட்டங்களில் மாநில மையம் கூடுதல் கவனம் செலுத்தி அனைத்து பிரச்சனைகளையும், சுமூகமாக தீர்த்து வைத்திட தொடர் நடவடிக்கைகள் கட்டாயம் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேற்கொண்ட இயக்கங்கள் மற்றும் பெற்ற அரசாணைகளைவிட தற்போது சந்தித்து வரும் பிரச்சனைகள் அதிகமானதாக இருப்பதாகவும், இதனை எதிர்கொள்ள அமைப்பை மேலும் வலிமைபடுத்த வேண்டும் எனவும், பத்திற்கும் மேற்பட்ட பணி நிலையில் 14,000 உறுப்பினர்களை கொண்ட சங்கத்தில் நாளது தேதி வரை 6000 உறுப்பினர்களுக்கான இணைப்புக் கட்டணம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளதாகவும், இதனை துரிதபடுத்தி ஒரு உறுப்பினர்கூட விடுதலின்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய இணைப்பு கட்டணம், நிலுவையிலுள்ள சங்கக்குரல் சந்தா, மநிலமைய கட்டிடநிதி, TNGEA மாநாட்டு நிதி, 2022-ம் ஆண்டிற்கான மாநில மைய நாட்காட்டி நிதி மற்றும் 2023-ம் ஆண்டிற்கான நாட்குறிப்பு நிதி ஆகியவற்றை எதிர்வரும் 30.04.2023-க்குள் செலுத்திட மாவட்ட மையங்கள் விரைந்து செயல்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

தற்போது எதிர் கொண்டுள்ள கோரிக்கைகளான துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தில் நிரந்தர தீர்வு, எதிர்கால பதவி உயர்விற்கான ஆணைகள், அலுவலக உதவியாளர் இரவுக் காவலர் மற்றும் மசால்சி பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்புவது, இளநிலை, முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்றம் விதிதிருத்தம் அரசாணை, துணை ஆட்சியர் பட்டியல் மற்றும் பதவி உயர்வு, வாக்காளர் பட்டியல் சிறப்பு பணியிடங்கள், முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் ஒருங்கிணைந்த பணி முதுநிலை பட்டியல் தீர்வு, வருவாய்த்துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பிறதுறை பணியிடங்களை பாதுகாத்தல் மற்றும் புதிய அலகுகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளில் விரைவில் தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை விரிவாக எடுத்துரைத்தார். மேலும், பொதுமக்களுக்கான சான்றிதழ்கள் வழங்குதல், இ-அலுவலகம் நடைமுறைபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணி நெருக்கடிகளுக்கு தீர்வு காணவேண்டிய அவசியம் குறித்தும், அரசின் நிலைபாடு குறித்தும் எடுத்துரைத்தார்.

இறுதியில் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் பெறுவது, பங்களிப்பு ஓய்வூதியத்தை ரத்து செய்து அனைவருக்கும் பழைய ஓய்வூதியம் பெற்றுத் தருவது, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சரண்விடுப்பு ஒப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை நிச்சயம் வென்றிட வேண்டும் எனவும், அதற்கேற்றவாறு நமது செயல்பாடுகள் அமைந்திடவேண்டும் எனத் தெரிவித்தார்.

மத்திய செயற்குழு கூட்டத்தை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள **மாநில துணைத் தலைவர் திரு.டி.செந்தூர்ராஜன், தூத்துக்குடி மாவட்டத் தலைவர் திரு.அ.சுவாமிநாதன், மாவட்டச் செயலாளர் திரு.ஞா.ஞானராஜ் மற்றும் மாவட்டப் பொருளாளர் திரு.மா.ராமச்சந்திரன் உள்ளிட்ட அனைத்து மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களையும்** வெகுவாக பாராட்டினார்.

பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் கடந்த 26.11.2022-ல் நடைபெற்ற சென்னை மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்பாக எடுக்கப்பட்ட கடந்த கால நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். குறிப்பாக கடந்த 18.12.2022, 19.01.2023, 29.01.2023, 11.02.2023, 02.03.2023 மற்றும் 25.03.2023 ஆகிய தினங்களில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்தில்

வருவாய்த்துறை அலுவலர்களின் நலன் சார்ந்த கோரிக்கைகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் இயற்றப்பட்டு உயர் அலுவலர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது குறித்தும், மேலும் கடந்த மூன்று மாதங்களில் தொடர்ச்சியாக 6 முறை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து பட்டதாரி அல்லாதோர் பதவி உயர்வு பிரச்சனை, நான்கு ஆண்டுகளாக வெளியிடப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ள துணை ஆட்சியர் பட்டியலை உடன் வெளியிடுவது, காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்புதல் மற்றும் முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித்திருத்த அரசாணையினை வெளியிடல் உள்ளிட்ட வருவாய்துறை அலுவலர்களின் வாழ்வாதாரம் சார்ந்த கோரிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது குறித்தும் தெரிவித்தார்.

கடந்த 30.03.2023 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிச்செயலர்-III திரு.சண்முகம், இ.ஆ.ப., அவர்களை சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்து வருவாய்த்துறையில் துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தின் காரணமாக பணியிறக்கம் பெறும் அலுவலர்களின் பாதிப்புகள் குறித்தும், அதனை சரிசெய்வது தொடர்பாக மாநில மையத்தின் சார்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டது குறித்தும், எனவே இக்கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நேரடி கவனத்திற்கு கொண்டு சென்று உரிய தீர்வினை குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கிடவேண்டுமென வலியுறுத்தப்பட்டது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாநில மையத்தின் சார்பில் கடந்த 08.02.2023 அன்று அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை செயலாளர், திரு.பனீந்திரரெட்டி, இ.ஆ.ப., அவர்களை சந்தித்து தமிழ்நாடு மாநில வாணிபக்கழகத்தில் வருவாய்த்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள துணை ஆட்சியர் நிலையிலான மாவட்ட மேலாளர் பணியிடங்களில் MBA பட்டதாரிகளைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளதை ரத்து செய்து, மீண்டும் வருவாய்த் துறையினைச் சேர்ந்த துணை ஆட்சியர்களைக் கொண்டு நிரப்பிடுமாறு வலியுறுத்தப்பட்டது குறித்தும், மேலும் கடந்த 30.03.2023 அன்று பொதுத்துறை செயலாளர் Dr.ஜகந்நாதன்,இ.ஆ.ப., அவர்களை சந்தித்து ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி உயர்வு பட்டியல் காலதாமதமாக வெளியிடப்படுவதால் வருவாய்த்துறையில் பல்வேறு நிலையில் பதவி உயர்வில் தேக்க நிலை ஏற்படுகிறதென்றும், எனவே இனிவரும் காலங்களில் மைய நாளான மார்ச் மாதத்திலேயே மாவட்ட வருவாய் அலுவலர் பதவி உயர்வு பட்டியலை வெளியிடுமாறு வலியுறுத்தப்பட்டது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த 01.12.2022, 08.02.2023, 20.02.2023 மற்றும் 30.03.2023 ஆகிய தினங்களில் தொடர்ச்சியாக நான்கு முறை தமிழக முதன்மை தேர்தல் அலுவலர் திரு.சத்யபிரத சாஹூ இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து 6 சட்டமன்ற தொகுதிக்கு மேற்பட்ட மாவட்டங்களில் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்கள் ஏற்படுத்துதல் குறித்தும், மேலும் கடந்த 20.02.2023 அன்று அரசு முதன்மை செயலாளர் / பிற்பட்டோர் மற்றும் சிறுபாண்மையினர் நலத்துறை செயலாளர் திரு.மங்கத்ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்களை சந்தித்து தமிழக அரசினால் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 6 மாவட்டங்களில் இயங்கிவரும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள துணை வட்டாட்சியர் நிலையிலான கண்காணிப்பாளர் மற்றும் துணை ஆட்சியர் பணியிடங்களில் 50% பணியிடங்களை வருவாய்த்துறைக்கு ஒதுக்கீடு செய்திடக் கோரி விரிவான முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும் தெரிவித்தார்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர், திரு.எஸ்.கே.பிரபாகர்,இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை முதன்மைச் செயலாளர், திரு.குமார் ஜயந்த், இ.ஆ.ப., வருவாய் நிர்வாக இணை ஆணையர்கள் திரு.அ.ஜான்லூயீஸ்,இ.ஆ.ப., மற்றும் திரு.சிவராசு,இ.ஆ.ப., உள்ளிட்ட உயர் அலுவலர்களை

முறையே கடந்த 14.12.2022, 29.12.2022, 11.01.2023, 23.01.2023, 08.02.2023, 20.02.2023 மற்றும் 30.03.2023 ஆகிய தினங்களில் தொடர்ச்சியாக சந்தித்து துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தின் காரணமாக பணியிறக்கம் பெறும் பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பணிப்பாதுகாப்பினை உறுதி செய்து அரசாணை வெளியிடுதல், அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களை உடன் நிரப்புதல், முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்றம் விதித்திருத்த அரசாணை, புதுக்கோட்டை மாவட்ட முதுநிலை தொடர்பான சீராய்வு மனுவின்மீது ஆணை பிறப்பித்தல், மதுரை, தேனி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் முதுநிலை தொடர்பான பரிந்துரை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக விரிவாக பேசப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் **தமிழ்நாடு அரசுப்பணியாளர் பணி நிபந்தனைகள் சட்டம் - 2016 பிரிவு 27 (F)ன் படி சுற்றறிக்கை வெளியிடப்பட்டதற்கும், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்திற்கும் எந்தவொரு தொடர்புமில்லையென்றும், பின்னடைவு பணியிடங்களை நிரப்புவதில் சமூக நீதிக்கு எதிராகவோ, இடஒதுக்கீட்டு கொள்கைகளுக்கு எதிராகவோ இயக்கம் ஒருபோதும் வலியுறுத்தவில்லை என்றும், பின்னடைவு பணியிடங்களுக்கு பட்டியலில் மீண்டும், மீண்டும் தொடர்ச்சியாக வரிசை எண் அளித்திடுவதை தவிர்த்திடுமாறு மாநில மையத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டதை ஸ்தாபனத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்திடும் நோக்கில் சிலர் வேண்டுமென்றே திரித்து தவறான தகவல்களை பரப்பியுள்ளனர்** என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தார்.

இச்செயற்குழு கூட்டத்தில் 38 மாவட்டத்தைச் சார்ந்த மாவட்ட நிர்வாகிகளும் கலந்துகொண்டு தங்களின் மாவட்டம் சார்ந்த பல்வேறு கருத்துக்களை விரிவாக எடுத்துரைத்தனர்.

இச்சிறப்பு வாய்ந்த மத்திய செயற்குழுக்கூட்டத்தில் வாழ்த்துரை வழங்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு.வெங்கடேசன் அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்ட மையத்தின் சார்பில் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

இம்மத்திய செயற்குழுவில் 38 மாவட்டங்களின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள்/நிருவாகிகளின் செழுமையான கருத்துக்கள், ஆக்கபூர்வமான விவாதங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக இயற்றப்பட்டன.

**நடவடிக்கை தீர்மானம் - 01:**

நான்கு ஆண்டுகளுக்கான துணை ஆட்சியர் பட்டியலை உடன் வெளியிடுதல், மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தில் பணியிறக்கத்தைத் தவிர்க்க பதவி உயர்வு பாதுகாப்பு அரசாணை வெளியிடுதல், பேரிடர் மேலாண்மைப்பிரிவில் கலைக்கப்பட்ட முதுநிலை வருவாய் ஆய்வாளர்/அலுவலக உதவியாளர் பணியிடங்களை மீண்டும் தோற்றுவித்தல், இளநிலை வருவாய் ஆய்வாளர்/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித்திருத்த அரசாணையினை உடன் வெளியிடல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பணிப்பளுவினை கருத்தில் கொண்டு அனைத்து நிலை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் மற்றும் தனிஊதியம் வழங்கிடக் கோருதல், அலுவலக உதவியாளர், இரவுக்காவலர் மற்றும் மசால்சி உள்ளிட்ட அடிப்படை பணியிடங்களை உடன் நிரப்பிடக் கோருதல் மற்றும் 16.08.2022 அன்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து கோரிக்கைகளின் மீதும் உரிய காலக்கெடுவிற்குள் ஆணைகள் வழங்கிடக்கோருதல் உள்ளிட்ட வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் **10.05.2023**

**முதல் சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் 38 மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வருவாய்த்துறை அலுவலர்கள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபடுவது** என்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 02:**

வருவாய்த்துறையில் இதுவரை இல்லாத வகையில் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியல் வெளியிடப்படாததால், துறையின் ஊழியர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்புகள் ஏற்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற வேண்டிய அலுவலர்கள் பலர், வயது முதிர்வின் காரணமாக தொடர்ந்து ஓய்வு பெற்று வருதையும், இவர்களின் பணி உரிமை மற்றும் ஓய்வூதியப் பலன்கள் நிரந்தரமாக பாதிக்கப்பட்டுள்ளது குறித்தும், பல முறை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இதுவரை பட்டியல் வெளியிடப்படவில்லை. இதனால் பல மாவட்டங்களில் வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையிலான அலுவலர்கள் மிக அதிக எண்ணிக்கையில் பணியிறக்கம் பெற்று வருகின்றனர்.

மேலும் தொடர்ந்து பட்டியல் வெளியிடப்படாத காரணத்தினால் பிறதுறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் உள்ள துணை ஆட்சியர் நிலையிலான பணியிடங்களை நிரந்தரமாக இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. **கடந்த 16.08.2022 அன்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியல் 15.11.2022-க்குள் வெளியிடப்படும் என்று உறுதியளித்தும்** இதுவரை பட்டியல் வெளியிடப்படாதது வருவாய்த்துறை அலுவலர்களுக்கிடையே மிகுந்த மன அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு உடன் துணை ஆட்சியர் பட்டியலை வெளியிடுமாறு தமிழக அரசை மீண்டும் வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 03:**

மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் துணை வட்டாட்சியர் / வட்டாட்சியர் உள்ளிட்ட பட்டியல்கள் திருத்தங்களின் காரணமாக **10 ஆண்டுகள் பணிநிறைவு செய்த வட்டாட்சியர்கள் முதுநிலை வருவாய் ஆய்வாளர்களாக பதவி இறக்கம் பெறும் அவலநிலை குறித்து** கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து முறையீடு அளிக்கப்பட்டும் கடந்த 01.11.2022 அன்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சுமூக உடன்படிக்கை எட்டப்பட்டும் இதுவரை ஆணைகள் வழங்கப்படாமல் காலதாமதம் செய்யப்படுவது, பணியிறக்கம் பெறும் அலுவலர்களிடம் மட்டுமின்றி அனைத்து அலுவலர்களிடையே மன வலியை ஏற்படுத்தியுள்ளது. இதில் பாதிப்படைந்த அலுவலர்கள் உடல்நலம் / மன நலம் பாதித்து உயிரிழந்துள்ளனர் என்பதைக் கருத்தில் கொண்டு விரைந்து தீர்வு காண வேண்டுமென்றும், பதவி இறக்கம் பாதிப்புகளை சரிசெய்திட ஏற்கனவே ஏற்றுகொள்ளப்பட்டுள்ள தீர்வின்படியான ஆணைகளை விரைந்து வெளியிட உரிய நடவடிக்கை எடுத்திடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 04:**

பேரிடர் காலங்களில் மக்களின் உயிரை காக்கக்கூடிய பல்வேறு பணிகளை இரவு, பகல் பாராமலும், கண் துஞ்சாமலும், 24 மணி நேரமும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். ஏற்கனவே பல்வேறு பணிச்சுமையுடன் அலுவலர்கள் பணிபுரிந்து வரும் சூழலில் இதனை மேலும் கடுமையாக்கும் விதமாக பேரிடர் மேலாண்மைப் பிரிவில் செயல்பட்டுவந்த **முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய**

**பணியிடங்களை 31.03.2023 முதல் கலைத்து ஆணையிடப்பட்டுள்ளதற்கு இச்செயற்குழு தனது கடுமையான ஆட்சேபனையை பதிவு செய்கிறது**. எனவே கலைக்கப்பட்ட இரண்டு பணியிடங்களையும் மீண்டும் உருவாக்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 05:**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் பெரும் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர், உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே **இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர்** என பெயர் மாற்றம் செய்து 2016-ம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு ஏழு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் தொடர்பில்லாத பல்வேறு காரணங்களை தெரிவித்து இக்கோப்பு தலைமைச்செயலகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக நிலுவையாக உள்ளது. மேலும், கடந்த 16.08.2022 அன்று நடைபெற்ற அரசுடனான பேச்சுவார்த்தையில் இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டும், இதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மேலும் விதித்திருத்த ஆணை வெளியிடப்படாததால் மேற்கண்ட அரசாணையினை நடைமுறைப்படுத்திட இயலவில்லை. **எனவே இதில் மேலும் காலம் தாழ்த்தாது உரிய விதிதிருத்தங்களை உடனடியாக வெளியிட** தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 06:**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் காலியாகவுள்ள மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அலுவலக உதவியாளர்; இரவுக்காவலர் மற்றும் மசால்சி ஆகிய அடிப்படை பணியிடங்களை நிரப்பிட அனுமதித்து கடந்த 19.02.2021-ல் அரசிடமிருந்து கடிதம் பெறப்பட்டும் இப்பணியிடங்கள் நிரப்பப்படாத காரணத்தினால்** தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தொடர் அழுத்தத்தின் காரணமாக மேற்கண்ட பணியிடங்களை நிரப்பிட தடையேதுமில்லை என தெரிவித்து கடந்த 25.11.2022-ல் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அரசிடமிருந்து மீண்டும் கடிதம் அனுப்பப்பட்டும் இதுவரை மேற்கண்ட பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. எனவே இவ்வினத்தில் காலதாமதம் செய்வதைத் தவிர்த்து அனைத்து மாவட்ட ஆட்சியாக் ளுக்கும் உடனடியாக உரிய சுற்றறிக்கை அனுப்பி மூன்றாண்டுகளுக்கு உட்பட்ட பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களை வலியுறுத்துவதென்றும், மேலும் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசை வலியுறுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 07:**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் இயற்கை சீற்றம், சட்டம்-ஒழுங்கு பராமரித்தல், முக்கிய பிரமுகர்கள் வருகை, பல்வேறு வகையிலான நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்குதல் மற்றும் சட்டமன்ற/பாராளுமன்ற தேர்தல் பணிகள் உள்ளிட்ட அதி முக்கியமான பணிகளை இரவு/பகல் பாராது விடுமுறை தினங்களில்கூட தொடர்ந்து 24 மணிநேரமும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே இவர்களின் பணிப்பளு மற்றும் பணித்தன்மையினை கருத்தில் கொண்டு **அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் மற்றும் தனி ஊதியம் வழங்கிட** தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 08:**

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணிக்கு ஆறு சட்டமன்ற தொகுதிகள் கொண்ட மாவட்டங்களில் **நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்கள் ஏற்படுத்துதல்** மற்றும் கடந்த 20 ஆண்டுகளாக வருவாய்த்துறையில் தேர்தல் பிரிவில் பணியாற்றி வந்த தற்காலிக இளநிலை உதவியாளர்களின் வயது மூப்பு மற்றும் அவர்களின் பணி அனுபவத்தினையும், கருத்தில் கொள்ளாமல் திடீரென அவர்களை பணியறவு (Retrenched from Service) செய்துள்ளதை ரத்து செய்து அவர்களின் நீண்டகால பணிக்காலத்தையும், வாழ்வாதார நிலையினையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மீண்டும் பணியிடம் வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 09:**

ஒருங்கிணைந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் முதுநிலை நிர்ணயித்தல் தொடர்பாக **தேனி, மதுரை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களை** நேரடி விசாரணை மேற்கொண்டு, வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு ஓராண்டு கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்படாமல் கோப்பு அரசிடம் நிலுவையில் உள்ளது. எனவே இதில் மேற்கொண்டு காலம் தாழ்த்தாமல் வருவாய் நிர்வாக ஆணையரால் அனுப்பப்பட்டுள்ள பரிந்துரையின் மீது நிரந்தர தீர்வினை உடன் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 10:**

புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில் கடந்த **04.04.2012 அன்று முதுநிலைவருவாய் ஆயவ் லீளர் பட்டியல் வெளியிடப்பட்டது. மிகுதியானஅளவில் காலிப் பணியிடம் இருந்தும், உரியகாலத்தில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை.** இதனால் பட்டியலில் இடம்பெற்றிருந்த அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை சரிசெய்திடக் கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசிடம் ஓராண்டாக நிலுவையில் உள்ளது. எனவே இதன்மீது விரைந்து ஆணை வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவுசெய்யப்பட்டது.

**தீர்மானம் - 11:**

மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்புரையின் அடிப்படையில் மாநில குடிமைப் பணியில் (State Civil Service) வருவாய்த்துறை அல்லாத பிறதுறை அலுவலர்களையும் சேர்த்து **தமிழ்நாடு நிர்வாக பணியமைப்பு (Tamil NaduAdministrative Service) என்ற புதிய பணியமைப்பினை ஏற்படுத்த முயற்சிப்பதினால்** வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பதவி உயர்வில் கடுமையான பாதிப்புகள் ஏற்படும். எனவே வருவாய்த்துறையை பாதிக்கும் இச்செயலை உடனடியாக ரத்து செய்திட வேண்டுமென தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 12:**

**மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், மாநகராட்சிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் (TNCSC) மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் (TASMAC)** உள்ளிட்ட அலுவலகங்களில் வருவாய்த்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களில் பிறதுறை அலுவலர்களைக் கொண்டு நிரப்பக்கூடாது என்றும், எந்த நிலையிலும் பணியிட இழப்பு ஏற்படுத்துதல் கூடாது என்றும், தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 13:**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பல்வேறு சான்றிதழ்கள் கோரி மிகுதியான அளவில் மனுக்திள் வருவதால் அவற்றினை முடிவு செய்வதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் சான்றிதழ் பெறுவதில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். எனவே பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படையில் இதனை விரிவாக பரிசீலனை செய்து நிர்வாக நலன் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி **சான்றிதழ் வழங்கும் பணிக்கென வட்டத்திற்கு ஒரு துணைவட்டாட்சியர் பணியிடங்களை நிரந்தரமாக உருவாக்கிட** தமிழக அரசினை வலியுறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

**தீர்மானம் - 14:**

16.08.2022 மற்றும் 01.11.2022 ஆகிய தேதிகளில் மாண்புமிகு **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறற் உயர் அலுவலர்களுடனான பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட** தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அனைத்து கோரிக்கைகளையும் மேலும் காலம் தாழ்த்தாது உடன் நிறைவேற்றிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 15:**

முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகிய நிலைகளில் மாவட்ட மாறுதல் கோரி வருவாய் நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பப்படும் முன்மொழிவுகளை பரிசீலனை செய்து ஆணைப்பிறப்பித்திட அதீத காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் மாவட்ட மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ள வருவாய்த்துறை அலுவலர்கள் மிகுந்த மனச்சோர்வுடன் பணிபுரிந்து வருகின்றனர். எனவே **வருவாய்த்துறையில் பணிபுரிந்து வரும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இணையவழி கலந்தாய்வின் மூலம் வழங்கப்படும் ஒருவழி/இருவழி மாவட்ட மாறுதல் போன்று முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள், இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோருக்கும்** இணையவழி கலந்தாய்வின் மூலம் மாவட்ட மாறுதல் வழங்கிட நடவடிக்கை எடுத்திடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 16:**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தற்போது வேளாண்மைக் கணக்கெடுப்பு பணியினை கிராம நிர்வாக அலுவர்கள் முற்றாக புறக்கணித்துள்ளதால் அப்பணிகளை குறுவட்ட வருவாய் ஆய்வாளர்கள் மேற்கொள்ளவேண்டுமென பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட நிர்வாகத்தால் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதனால் குறுவட்ட வருவாய் ஆய்வாளர்கள் மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளனர். எனவே **வேளாண் கணக்கெடுப்பு பணியில் குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களுக்கு அழுத்தம் கொடுப்பதை முற்றாக கைவிட்டு** தொடர்புடைய துறையின் மூலம் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆணையிடுமாறு வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோரை வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 17:**

**தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் கடந்த 02.02.2016, 03.02.2016, 21.02.2016, 04.10.2018 ஆகிய நான்கு நாட்கள்** நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தம், மற்றும் 08.01.2019 முதல் 09.01.2019 வரைநடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தம் உள்ளிட்ட **6 நாட்களை பணிக்காலமாக வரன்முறை செய்து ஆணை வழங்கி**ட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யயப்பட்டது.

**தீர்மானம் - 18:**

தமிழகத்தில் செயல்பட்டுவரும் வெளிநாட்டு மதுபானம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் வடிப்பக ஆலைகளில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற உற்பத்தித் திறனின் அடிப்படையில் கலால் மேற்பார்வை அலுவலர் / துணை வட்டாட்சியர் உள்ளிட்ட பணியிடங்கள் மிக குறைந்த அளவில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால் முன்னர் நடைபெற்ற மதுபான உற்பத்தியைவிட தற்போது 10 மடங்கிற்கும் கூடுதலான அளவில் உற்பத்தி நடைபெறுவதால் அங்கு பணிபுரியும் வருவாய்த்துறை அலுவலர்களின் பணிப் பளுவினை கருத்தில் கொண்டு **கூடுதலாக செய்யப்பட்டு வரும் உற்பத்தித் திறனிற்கேற்ப புதிய துணை வட்டாட்சியர் பணியிடங்களை கூடுதலாக ஏற்படுத்தி**ட தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 19:**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்ட ஈப்புகள் 20 ஆண்டுகளைக் கடந்து பயன்பாட்டிற்கு தகுதியற்றவைகளாக மாறி பல ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் இதுவரை மேற்கண்ட ஈப்புகளை கழிவு செய்து புதிய ஈப்புகள் வழங்கப்படாததால் பழுதடைந்த ஈப்புகளை வைத்துக்கொண்டு வட்டாட்சியர்கள் சொல்லொணாத் துயரமடைந்து வருகின்றனர். எனவே வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்துவரும் வட்டாட்சியர்களின் பணியின் முக்கியத்துவம் கருதி **பயன்பாட்டிற்கு தகுதியற்ற ஈப்புகளை கழிவு செய்து, வருவாய் வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் உள்ளிட்டோருக்கு புதிய ஈப்புகள் வழங்கிட** தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 20:**

அரசுப் பணியில் பார்வைத்திறன்/செவித்திறன் குறைபாடுடைய அலுவலர்களுக்கு பவானிசாகர் அடிப்படை பயிற்சியிலிருந்து ஏற்கனவே விலக்களித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைப்போன்றே, **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில், பார்வைத்திறன்/செவித்திறன் குறைபாடுடைய வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஒரத்தநாடு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட பயிற்சியிலிருந்து விலக்களித்து** முதுநிலை வருவாய் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 21:**

கொரோனா பெருந்தொற்றின் காரணமாக மூன்றாண்டுகளைக் கடந்தும் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திட இயலாத அலுவலர்களின் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்து ஆணையிடுவதற்கு, தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கிட பரிந்துரை செய்து **வருவாய் நிருவாக ஆணையரால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவின் அடிப்படையில் மாவட்டங்களிலேயே தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்து ஆணையிடவதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளித்திடுமாறு** தமிழக அரசினை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 22:**

பொது மக்கள் குறைதீர்ப்பு தின மனுக்கள், மாண்புமிகு தமிழக முதல்வரின் தனிப்பரிவு மனுக்கள் மற்றும் முதல்வரின் முகவரி ஆகிய திட்டத்தின் கீழ பெறப்படும் மனுக்கள் ஆகியவற்றை முடிவு செய்வதில் A, B, C என தரககுறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு

தரக்குறியீடு (Ranking System) நிர்ணயம் செய்யப்படுவதால் மனுக்களை முடிவு செய்வதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனால் **நிலுவை மனுக்களை குறைத்திட இயலாமல் வட்டாட்சியர்கள் கடும் மன உளைச்சலில் பணிபுரிந்து வருகின்றனர். எனவே குறைதீர்ப்பு மனுக்களை முடிவு செய்வதில் A, B, C என தரக்குறியீடு நிர்ணயம் செய்திடும் முறையினை கைவிடுமாறு** தமிழக அரசை வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 23:**

கடந்த 2003-ம் ஆண்டு ஜாக்டோ - ஜியோ பேரமைப்பின் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர் / ஆசிரியர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக அத்தியாவசிய பணிகள் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் அரசாணை நிலை எண்:85, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை, நாள்: 04.07.2003-ன்படி பல்வேறு அரசு துறைகளில் மாவட்டத்திற்கு 500 இளநிலை உதவியாளர்கள் வீதம் 15500 நபர்கள் தொகுப்பூதியத்தின் கீழ் தற்காலிக இளநிலை உதவியாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

இவர்கள் 2033-ம் ஆண்டிலிருந்து 2012-ம் ஆண்டு வரை தொகுப்பூதியத்தின் கீழ் பணிபுரிந்து வந்து கடந்த 2012-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட சிறப்புத்தேர்வில் தேர்ச்சி பெற்று காலமுறை ஊதியத்தின் கீழ் முறையான அரசுப்பணியில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். தொகுப்பூதியத்தின் கீழ் இவர்கள் முதன்முதலாக பணியில் சேர்ந்த நாளிலிருந்து முறையான பணிக்காலமாக வரன்முறைப்படுத்திடக்கோரி **மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் சாதகமான தீர்ப்பினை பெற்றுள்ளனர். எனவே மேற்கண்ட தீர்ப்புரையின் அடிப்படையில் இவர்கள் முதன் முதல் பணியில் சேர்ந்த நாளிலிருந்து அனைத்து பணிக்காலங்களையும், முறையான பணிக்காலமாக வரன்முறைப்படுத்திட** தமிழக அரசினை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 24:**

2023-2024-ம் ஆண்டிற்கான முதுநிலை வருவாய் ஆய்வாளர் காலி ப்பணியிடங்களின் எண்ணிக்கை (Estimate of Vacancy) நிர்ணயம் செய்வதில் பல்வேறு மாவட்டங்களில் தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதைக் களைந்து வருவாய் **நிர்வாக ஆணையரகத்திற்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள காலியிட மதிப்பீட்டு அறிக்கைகளை மீண்டும் ஆய்வு செய்து சரியான விகிதாச்சார அடிப்படையில் நேரடி நியமனம் (1/3) மற்றும் பதவி உயர்வு (2/3) மூலம் நிரப்பிடுவதை** உறுதி செய்திட வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 25:**

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி ஆதிதிராவிடர் மற்றும், பழங்குடியினர் நலத்துறை, பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆகிய துறைகளின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் பள்ளிகள் மற்றும் விடுதிகள் ஆகிய அனைத்தும் பள்ளிக்கல்வித்துறையின் கீழ் கொண்டுவரப்படும் நேர்வில் **மேற்கண்ட துறைகளிலிருந்து வருவாய்த்துறைக்கு ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள பணியிடங்களை குறைத்திடக்கூடாது** என்று தமிழக அரசை வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 26:**

குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் பொது விநியோகத் திட்டத்தினை பிரித்து **பொதுவிநியோகத்**

**திட்டத்துறை என்ற பெயரில் தனி துறை உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நோக்கில் மேற்படி துறையிலிருந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைக்கு ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்கள் எதனையும் குறைத்திடக் கூடாது** என தமிழக அரசை வலியுறுத்தவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 27:**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட மையங்களை மேலும் வலுப்படுத்தி செழுமைப்படுத்திடும் நோக்கில் மாவட்ட நிர்வாகிகளுக்கு **ஸ்தாபன பயிற்சியினை நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய மண்டல அளவிலான பயிற்சி அளித்திட** செயல்திட்டம் வகுத்து மாநில / முன்னாள் மாநில நிர்வாகிகள் மூலம் பயிற்சி வழங்கிட உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 28:**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தை மேலும் வலுப்படுத்திட **அனைத்து மாவட்டங்களிலும் உறுப்பினர் இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா ஆகியவற்றை 30.04.2023-க்கு முன்பாக 100% நிறைவு செய்திட** மாவட்ட மையங்களை கேட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது. மேலும், சென்னை தலைமையக கட்டட நிதி நிலுவை, சேலம் கோரிக்கை மாநாடு பங்களிப்பு நிதி, அரசு ஊழியர் சங்க மாநாடு நிதி, TNROA நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பு நிதி உள்ளிட்ட நிதி நிலுவைகளை விரைவில் செலுத்திட வலியுறுத்தப்பட்டது.

மாவட்ட மையத் தேர்தலை நடத்தாமல் உள்ள இராமநாதபுரம் மாவட்ட மைய தேர்தலை உடனடியாக ஜனநாயக முறையில் நடத்தி முடிவினை அறிவித்திட வலியுறுத்துவது எனவும், தமிழகத்திலுள்ள 314 வட்டக் கிளைகளிலும் நிர்வாகிகளை தேர்வு செய்து புனரமைக்க உரிய நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

இறுதியாக, மாநில பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் அவர்கள் குறுகிய காலத்தில் மத்திய செயற்குழுக் கூட்டத்தை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்த தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகளுக்கும், கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

| | |
|---|---|
| ஒம்/- | ஒம்/- |
| (சு.சங்கரலிங்கம்) | (எம்.பி.முருகையன்) |
| பொதுச் செயலாளர், | மாநிலதலைவர் |
| 82207 61781 | 98432 64332 |

பெறுதல்

மாவட்டத் தலைவர், மாவட்டச் செயலாளர், மாவட்ட பொருளாளர் மற்றும்
மத்திய செயற்குழு உறுப்பினர்கள், அனைத்து மாவட்டங்கள்.

நகல்:

அனைத்து மாநில நிர்வாகிகள்.



ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு பிரச்சார இயக்கத்தில் மாநில செயலாளர் செந்தில்குமார்



பர்கூர் வட்டத்தில் மாநில செயலாளர் T.D.ஜோஷி பரப்புரை



மதுரை மாவட்டத்தில் மாநில செயலாளர் எம் எஸ் அன்பழகன் பரப்புரை

# அடிமைமுறைக்கு வழிவகுக்கும் புதிய தொழிற்சாலைகள் சட்ட திருத்தம்



8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்பது உலகத் தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமையாகும். அந்த உரிமையைப் பறிக்கும் வகையில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் தொழிலாளர் விரோத மசோதாவை திமுக அரசு நிறைவேற்றியுள்ளது. இது தொழிலாளர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த மசோதாவைத் தொழிலாளி வர்க்கம் ஒரு போதும் ஏற்காது. முறியடிக்கும் வரை எதிர்த்துப் போராடும் என்பது உறுதி.

150 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமையை ஒரு திருத்தம் மூலமாகத் தமிழ்நாடு அரசாங்கம் பறிப்பதை யார்தான் ஏற்றுக்கொள்வார்கள். ஒன்றிய பாஜக அரசு நாடாளுமன்றத்தில் இந்த மசோதாவை நிறைவேற்றியபோது அனைத்து எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்தன. அதில் திமுகவும் அடக்கம். நாட்டிலேயே கர்நாடக பாஜக அரசுக்கு அடுத்தபடியாக இந்த மசோதாவை நிறைவேற்றி தொழிலாளர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ள மாநிலம் தமிழ்நாடுதான்.

2020ஆம் ஆண்டு அப்போதைய அதிமுக அரசு வேலை நேரத்தை அதிகரிக்க முயன்ற போது அதை திமுக கடுமையாக எதிர்த்தது. பாஜக ஆளும் மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் எட்டுமணி நேர வேலை நேரத்தை 12 மணி நேரமாக உயர்த்தியதற்கு திமுக கண்டனம் தெரிவித்ததையும் தொழிலாளி வர்க்கம் மறந்துவிடவில்லை. தொழில்நுட்பம் வளர்ந்து வரும் நிலையில், வேலை நேரம் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வரும் நிலையில் தொழிலாளர் நலனுக்கு முரணாகவும் சட்ட நியாயங்களுக்குப் புறம்பாகவும் இந்த சட்டத் திருத்தம் உள்ளது.

எட்டு மணி நேர வேலை என்ற உரிமைக்காகத் தொழிலாளர்கள் பல போராட்டங்களை நடத்தியுள்ளனர். இந்த கோரிக்கையை அடைய ஏராளமான தொழிலாளர்களைத் தொழிற்சங்க இயக்கம் இழந்துள்ளது. தேவைப்படும் காலங்களில் தொழிற்சாலை ஆய்வாளரிடம் அனுமதி பெற்று வேலை நேரத்தை மாற்றிக் கொள்ளலாம் என்பது படிப்படியாக நிரந்தரமாகிவிடும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளன. இந்தச் சட்டத்தை திமுகவின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் கூட ஏற்காது. எனவே தொழிலாளர்கள் நலனில் தமிழ்நாடு அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமாயின் இந்த மசோதாவை உடனடியாக கைவிட வேண்டும்.

2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் என்பது மதவாத அரசுக்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல; மோடி அரசின் தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத, மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிரான போராட்டமும் ஆகும் என்பதை திமுக புரிந்து கொள்ள வேண்டும். தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமையைப் பாதுகாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் கடந்த 12.04.2023 அன்று தொழிலாளர் துறை அமைச்சர் 1948ஆம் ஆண்டு தொழிற்சாலை சட்டத்தில் சில திருத்தங்களை முன்மொழிந்தார். இந்த சட்டதிருத்தத்தை கைவிட வேண்டுமென சிபிஐ(எம்), சிபிஐ, மதிமுக, காங்கிரஸ், விசிக போன்ற கட்சிகள் கடுமையாக எதிர்த்த பின்பும், 21.04.2023 அன்று இச்சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. திமுக அரசு இச்சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள சுமார் 40,000க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரையும் அடிமைகளைப் போல வேலை வாங்க முதலாளிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**இவ்வளவு மோசமான ஷரத்துக்கள் ஒன்றிய அரசின் சட்டத்தொகுப்பில்கூட இல்லை. இது மிக மோசமான சட்டத்திருத்தம். திமுகவின் வரலாற்றில் மிகப்பெரும் கரும்புள்ளியாக இச்சட்டத்திருத்தம் மாறிவிடும். ஆனால் தொழிலாளி வர்க்கம் போராடி இதை முறியடிக்கும்.**

ஒட்டுமொத்த தொழிலாளர்களையும் பாதிக்கும் இச்சட்டத்தை நிறைவேற்றியதை நியாயப்படுத்தும் அடிப்படையில் அபத்தமான விளக்கங்களை அமைச்சர்கள் அளித்துள்ளனர். தோழிலாளர் அமைச்சர், சட்டத்தை முன்மொழிவதற்கு காரணமாக கூறியுள்ளது அபத்தமானது. ஒன்றிய அரசு நிறைவேற்றியுள்ள தொழிலக பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் தொகுப்பு சட்டத்தை அடிப்படையாக வைத்து இச்சட்டத்திருத்தத்தை முன்மொழிவதாக கூறியுள்ளார். ஒன்றிய அரசு கடந்த 2019ஆம் ஆண்டு நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்களை பாதிக்கும் அடிப்படையில் 4 சட்டத்தொகுப்புக்களை நிறைவேற்றியது. இந்த சட்டத்தொகுப்புக்களை இடதுசாரி கட்சிகள் எதிர்த்தன. திமுகவும் எதிர்த்தது. இப்போதும் இந்த சட்டதொகுப்பிற்கு எதிராக நாடுதழுவிய அளவில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சட்டத்தொகுப்பு நிறைவேற்றப்பட்டு 4 ஆண்டுகளாகியும் கடும் எதிர்ப்பு காரணமாக நிறைவேற்றிய சட்டத்தை அமல்படுத்த மோடி அரசு தயங்கி வருகிறது.

ஒன்றிய அரசே நிறைவேற்றத் தயங்கி வரும் ஒரு மோசமான சட்டத்தை முன்னுதாரணமாகக் கொண்டு, இச்சட்டத்தை திருத்துவதாக தொழிலாளர் அமைச்சர்

கூறுவது மிகவும் அபத்தமானது. அதைவிட அபத்தம், தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ள விளக்கம். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் அவசியத் தேவையையொட்டி இச்சட்டத்தை நிறைவேற்றியதாக கூறியுள்ளார். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு தொழிற்சாலைகள் சட்டமே பொருந்தாது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் வர்த்தக நிறுவனங்களாகும். தொழிலாளி விருப்பத்தின் பேரில் மட்டுமே சட்டம் அமலாக்கப்படும் என்று கூறியுள்ளது வேடிக்கையானது.

**1948 சட்டம் சொல்வது என்ன?**

நீண்ட நெடிய போராட்டங்களுக்குப்பின் தொழிற்சாலை சட்டம் 1948ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

- 1948 சட்டம் வேலை நேரம் 8 மணி நேரம் என உறுதிப்படுத்தியுள்ளது.
- வாரத்தில் 48 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்கக் கூடாது
- அவ்வாறு கூடுதல் வேலை வாங்க வேண்டுமெனில், தொழிற்சாலை ஆய்வாளரிடம் முன் அனுமதி பெற வேண்டும்
- முன் அனுமதி பெற்று கூடுதல் வேலை வாங்கினாலும், 12 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்கக்கூடாது
- கூடுதலாக வாங்கும் வேலை நேரத்திற்கு இரட்டிப்பு சம்பளம் வழங்க வேண்டும்.

இந்த சட்டம் அனைத்து தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும். ஆனால், மாநில அரசாங்கம் அவசியத்தேவை என கருதினால், இந்த சட்டத்திலிருந்து சில பகுதிகளுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கலாம் எனவும், அவ்வாறு விதிவிலக்கு அளிப்பதற்கு பின்வரும் நிபந்தனைகளை பின்பற்ற வேண்டுமெனவும் தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 65இல் கூறப்பட்டுள்ளது.

- எந்த சூழ்நிலையிலும் ஒரு நாளைக்கு 12 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்கக் கூடாது
- வேலை நேரமும், இடைவெளி நேரமும் சேர்த்து 13 மணி நேரத்திற்கு மேல் செல்லக் கூடாது
- ஓவர் டைம் உட்பட வாரத்தில் 60 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்கக் கூடாது
- 7 நாட்களுக்கு மேல் தொடர்ச்சியாக வேலை வாங்கக் கூடாது 3 மாதத்தில் 75 மணிநேரத்திற்கு மேல் ஓவர் டைம் இருக்க கூடாது

**புதிய திருத்தம் என்ன?**

இப்படி வரையறுக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் சட்டத்தில் 65 (a) என்ற ஒரு புதிய பிரிவை உருவாக்கித்தான் தற்போது சட்டதிருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி பிரிவு 65இல் உள்ள நிபந்தனைகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த சட்டதிருத்தம் தொழிலாளர்களை அடிமை போல் நடத்துவதற்கு வழி வகுக்கிறது.

**புதிய சட்டம் அமுலானால்**

- வரைமுறையற்று எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் வேலை வாங்கலாம்.
- கூடுதலாக வாங்கும் வேலை நேரத்திற்கு மிகை ஊதியம் வழங்க வேண்டியதில்லை.
- இடைவேளை நேரமின்றி எப்படி வேண்டுமானாலும் வேலை வாங்கலாம்.
- இவ்வளவு மோசமான ஷரத்துக்கள் ஒன்றிய அரசின் சட்டத்தொகுப்பில்கூட இல்லை. இது மிக மோசமான சட்டத்திருத்தம். திமுகவின் வரலாற்றில் மிகப்பெரும் கரும்புள்ளியாக இச்சட்டத்திருத்தம் மாறிவிடும். ஆனால் தொழிலாளி வர்க்கம் போராடி இதை முறியடிக்கும்.

**- இரா.மங்களபாண்டியன்**
மாநில துணைத் தலைவர்

# TNROA-வும் திருவாரூர் மாவட்டமும்


அன்றைய தினம் வழக்கம்போல திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்றுவிட்டு மன்னார்குடிக்கு திரும்ப வந்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் தம்பி முகில்நாதனிடமிருந்து வந்த அந்த செய்தி கடும் அதிர்ச்சியை எனக்கு கொடுத்தது.

உடன் அங்கிருந்தபடியே நேரடியாக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, வரப்பெற்ற செய்தி உண்மைதான் என்பது அங்கு நான் கண்ட காட்சி சொன்னது.

மருத்துவமனையில் அலுவலக உதவியாளர் தம்பி ராஜகோபாலின் இரண்டு காதிலிருந்தும் இரத்தம் கசிந்தபடி இருந்தது. மற்றொரு தம்பியான ஆனந்தனது கால் முறிந்து அவர் படுத்த படுக்கையாக, கடுமையான காயங்களுடன் இருந்தார். ஒரு நிம்மதி தம்பி ஆனந்தனது உயிருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை என்று எனது மனதை தேற்றிக்கொண்டேன். அவருக்கு என்னென்ன உதவிகள் தேவையோ அத்தனையும் செய்யுங்கள் என அங்கிருந்து மருத்துவர்களிடம் கூறினோம். மருத்துவமனை டீனையும் சந்தித்து பேசிவிட்டோம்.

ஆனால் தம்பி ராஜகோபாலின் நிலையினை பார்த்தபோது நம்மால் ஒன்றுமே செய்ய முடியாதோ? ..என்று கையறு நிலையில் இருப்பதாக உணர்ந்தேன்.

அப்பொழுது பக்கத்தில் நின்றுக்கொண்டிருந்து அலுவலக உதவியாளர் தம்பி பாஸ்கரை அழைத்து விசாரித்தபோது.. தம்பிகள் இருவரும் அலுவலகப்பணி முடித்துவிட்டு வீடு சென்று கொண்டிருந்தனர் என்றும், அப்பொழுது அவர்களது வீட்டிற்கு வலது புறமாக திரும்பும் போது பின்பக்கமாக வந்த ஒரு நான்கு சக்கர வாகனம் மிக வேகமாக வலது பக்கம் மோதிவிட்டது என்றும், பலத்த அடிப்பட்ட ராஜகோபாலின் இரண்டு காதிலும்



இரத்தம் தொடர்ந்து வந்துக்கொண்டிருக்கின்றது என்றும், தம்பி ராஜகோபாலை காப்பாற்றுவது கடினம்தான் என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள் எனவும் அழுதுக்கொண்டே கூறினார். இதனைதான் தம்பி முகில்நாதனும் எனக்கு போனில் தெரிவித்திருந்தார்.

அப்பொழுது அங்கிருந்த அனைவரும் தம்பி ராஜகோபாலின் உயிரினை காப்பாற்ற முடியுமா சார்? என்று மருத்துவரிடம் கேட்டபொழுது.. 90% வாய்ப்பில்லை என்றும், தலையில் அடி பலமாக பட்டிருக்கின்றது என்றும், இரண்டு காதிலும் இரத்த கசிவு இருந்து கொண்டிருப்பதால் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு சென்றால் பார்க்கலாம் என கூறிவிட்டனர். அதுவும் ஒரு மணி நேரத்திற்குள்ளாக சென்று மருத்துவமனையில் சேர்த்துவிட்டால் காப்பாற்றிட வாய்ப்பிருக்கிறது எனவும் எங்களுக்கு நம்பிக்கை அளித்தனர்.

உடனடியாக ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகி ஒருவரது மகன் 108 ஆம்புலன்ஸுன் ஓட்டுநராக இருந்தார். அவரிடம் சென்று விசாரித்தோம். திருவாரூரிலிருந்து தஞ்சாவூருக்கு மன்னார்குடி வழியில் மட்டுமே செல்ல முடியும் என்றும், அதுவும் குறைந்தது 2

மணி நேரம் ஆகும் என்றும், ஆனால் என்னால் முடிந்த அளவு வேகமாக ஓட்டுகிறேன். நீங்களும் என்னோடு வாருங்கள் என்று கூறினார்.

துரிதமாக களத்தில் இறங்கினோம். உடன் தஞ்சாவூரில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர்.ரெங்கசாமி மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொருளாளரும், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரியில் மருந்தாளுனராக பணியாற்றி வரும் தோழர்.பாஸ்கர் அவர்களை தொடர்பு கொண்டு உதவிட கேட்டுக்கொண்டோம். அவரும் உடனே தஞ்சாவூர் கொண்டு வாருங்கள். சிகிச்சையை உடன் துவங்கிட எல்லா வேலைகளையும் இப்பொழுதே ஆரம்பிக்கிறேன். மருத்துவமனை டீன் அவர்களை சந்தித்து நிலைமையை சொல்கிறேன் என வாக்குறுதி அளித்தார்.

தோழர்களே! தம்பி ராஜகோபாலை 108 ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டு இரவு 12.00 மணிக்கு திருவாரூரிலிருந்து தஞ்சாவூர் புறப்பட்டோம். என்னோடு, தம்பி பாஸ்கர், ராஜகோபாலின் மனைவி மற்றும் அவரது மாமா ஆகியோர் இருந்தனர். வாகனத்தின் வேகத்தினை நினைத்தால் இன்றும் ஈரகுலை நடுங்கும். அந்தளவு வேகமாக ஓட்டினார் ஓட்டுனர். ஏதேனும் இடையில் வாகனம் வந்துவிட்டால் எங்கள் நான்கு பேரது நிலையும், தம்பி ராஜகோபாலைவிட மோசமாக இருந்திருக்கும்.

மிகச்சரியாக இரவு 1.00 மணிக்கு, ஒருமணி நேரத்தில், நாங்கள் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வந்தோம். வாசலுக்கு சென்று வாகனத்தினை நிறுத்தியவுடன் ஒரு பெரிய மெடிக்கல் டீமே காத்துக்கொண்டிருந்தது. உடனடியாக அறுவை சிகிச்சையினை ஆரம்பித்தனர். சுமார் 5 மணி நேரத்திற்கு பிறகு அதாவது அதிகாலை 6.00 மணி இருக்கும். மருத்துவர்கள் வந்து, அறுவை சிகிச்சை முடிந்துவிட்டது. ஆனால் இப்ப எதுவும் சொல்ல முடியாது என கூறிவிட்டனர்.

ஒரு மணி நேரத்திற்குள்ளாக..உயிரை பணயம் வைத்து கொண்டு வந்து மருத்துவக்கல்லூரியில் சேர்த்துவிட்டோம் என்ற நிம்மதி ஒருபுறம் இருந்தாலும், பட்ட கஷ்டத்திற்கு பலனாக தம்பி ராஜகோபால் உயிர் பிழைத்துவிட்டால் நல்லது. அவர் குடும்பத்திற்கு பெரிய உதவியை செய்தது போலாகும் என நினைத்தோம்.

சுமார் ஒருவாரக் காலம் இருக்கும்.. தம்பி ராஜகோபால் மயக்க நிலையில் இருந்து மெல்ல, மெல்ல நினைவு திரும்பிக்கொண்டிருக்கின்றார் என மருத்துவர்கள் நம்பிக்கை விதைத்தனர். இதனையும் தோழர்.பாஸ்கர் அவர்கள்தான் எங்களுக்கு கூறினார்.

தம்பி ராஜகோபாலுக்கு தலையில் அடி பலமாக விழுந்தினால், இன்று அறுவை சிகிச்சையில் வாய் பேச முடியாத நிலையில் உள்ளார். ஆனால் TNROA சங்கத்தின் தோழர்கள்தான் தனது உயிரைக் காப்பாற்றினார்கள் என்பதை அவர் பணிபுரியும் அலுவலகத்தில் 3 மாதம் கழித்து தெரிந்துக்கொண்டவுடன் தனது மாமாவுடன் வந்து பேச முடியாமலும், அழுக முடியாமலும் நன்றி சொன்னவிதம் இன்றும் என் மனதில் நிழலாடுகின்றது.

தம்பி ராஜகோபால் இன்று திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக வாய் பேச முடியாத நிலையிலும், சங்கத்தின்பால் பற்றுக்கொண்டு உறுதியான தோழனாக இப்பொழுதும் பணிபுரிந்து வருகின்றார்.

நாங்கள் சங்க போராட்டங்களுக்காக நோட்டீஸ் கொடுக்கவும், பிரச்சாரங்களுக்கு செல்லும்போதெல்லாரம் தானே முன்னின்று செய்வார். தம்பி ஆனந்தனும் அறுவை சிகிச்சை முடிந்து நல்ல நிலையில் பணிபுரிந்து வந்துக்கொண்டுள்ளார் சங்கத்தின்பால் உறுதி கொண்ட தோழனாக...

“தோழர்களே! வருவாய்த்துறை இருக்கும்வரை TNROA இருக்கும்."

“TNROA இருக்கும் வரை வருவாய்த்துறை இருக்கும்..”

**- வெ.சோமசுந்தரம்,**
மாநில பொருளாளர்.

ஆங்கில கட்டுரை

# Hundred years of International Labour Day in India: Why the eight-hour work day remains relevant

Securing it was a major working-class victory, an affirmaOon that overwork and unemployment are two sides of the same coin

May Day 2023 marks a hundred years since it was first commemorated in India on May 1, 1923, in the city of Madras. The initiative is attributed to M Singaravelu Chettiar, a towering nationalist figure, and an early communist associated with the anti-caste movement. By introducing May Day in India, Singaravelu sought to draw on a rich tradition of May Day celebrations in many parts of the world; thereby connecting the struggles of Indian workers with the global-level resistance of labour against brutal exploitation and dehumanisation. What began with a workers' rally in Chicago, in May 1886, created a momentum which reached Indian shores by 1923, and unleashed consequences that are still being felt in different corners of the world.

The tradition of May Day which Singaravelu drew on comprised a vibrant history that can be traced back to the nineteenth century when a pertinent common demand for the legalisation of an eight-hour workday emerged from within working-class platforms and organisations in Europe and America. In 1866, for example, the International Workingmen's Association, at its Congress in Geneva, promoted eight hours as the legal limit of the working day; arguing that it was a preliminary condition, without which efforts to emancipate the working class would prove futile. As aptly expressed by Karl Marx, "By extending the working day, therefore, capitalist production... not only produces a deterioration of human labour power by robbing it of its normal moral and physical conditions of development and activity, but also produces the premature exhaustion and death of this labour power itself".

The unfolding momentum of the labour movement and its increasingly articulate critique of capitalism paved the way for many iconic labour agitations, like the Chicago Haymarket workers' rally (1886), which in turn had a huge signalling effect. In the process, there emerged a steady realisation of the need to establish a common day for the assertion of non-negotiable labour rights, and for commemorating important labour struggles. By 1890, the Second International adopted the resolution for a worldwide struggle on the issue of a universal eight-hour work day. By the early 1900s, the May Day tradition was fairly entrenched with workers' political organisations and trade unions stopping work wherever possible, and using the occasion to energetically demonstrate for universal working-class demands.

These crucial landmarks in the global resistance of labour marked a strong assertion and defence of lesser work hours, which has not only challenged the internal logic of the capitalist economy to overwork a few, but also exposed the resultant problem of rampant unemployment and deterioration of workers' health. Thereby, an intrinsic part of the spirit of May Day has been the assertion that overwork and unemployment are two sides of the same coin. The decreasing work hours of employed workers is seen as generating the scope for gainful employment of those who are unemployed. In other words, labour's evolving critique of estranged labour came to vigorously argue against the encroachment on a large part of the day by extensive work hours, which denied many regular employment, and at the same time deprived employed workers of hours which they could

otherwise utilise for politics, spending time with friends and family, leisure, and basically to enjoy life as human beings.

Clearly, by the early 20th century an entire discourse had crystallised which drew attention to an essential fact; namely, that the wealth of the economy is a creation of labour. Indeed, everything in the modern world – from a sewing needle to huge aircraft carriers and skyscrapers are products of human labour. And yet, the entitlements of labour in the economy are negligible. For all long hours of work and physical exertion, what labour gets in return is simply poverty, precarity and powerlessness.

In the early 20th century in India, the exploited, precarious condition of labour was bolstered by colonial rule. The colonial state refrained from regulation of work relations between employers and employees, arguing that these constituted a private matter of contract. However, the assemblage of large numbers of workers at crucial points of the capitalist value creation chain, and labour's visible collective mobilisation against exploitative work arrangements in new workplaces, such as mines, plantations, dockyards, and factories, gradually propelled the recognition of employer-employee relations not as private relations, but as constituting the public domain of social relations.

At the time when Singaravelu launched the tradition of May Day in India, the horrors of the First World War and the appended radicalization of labour had facilitated worker-led revolutions in Europe, as well as numerous militant strike waves in India's industrial centres. Hence, in order to placate (in particular) organised labour and labour militancy, governments and post-War international institutions of diplomacy sought to install a uniform standard for labour rights. In this way, the first international treaty to mention the eight-hour workday was the Treaty of Versailles, which in the annexe of its thirteenth part established the International Labour Office, now the International Labour Organization (ILO). Given the spectre of revolution that loomed large, it was no coincidence that the eight-hour workday was the first topic discussed by the ILO, culminating in the Hours of Work (Industry) Convention, 1919.

Since then, an expansive corpus of labour laws evolved in India. However, only a small number of employer-employee work relations – associated mostly with the formal sector – have been governed by the country's labour laws, and thus, subject to state regulation.

Further, in the present conjuncture, we have seen a rapid decline in state regulation of labour-capital relations even in the formal sector. The deregulation of a large number of work relations is most evident in the rapid privatization of the public sector; the watering down of the provisions of labour inspection; the growing paradigm of self-certification by employers of their compliance with labour laws; the exemptions provided to smaller industrial and commercial establishments from furnishing proof of their compliance with statutory labour laws; and the tweaking of many statutory labour laws on occupational safety standards, work hours, minimum wage, compensation, industrial disputes, etc. by successive governments, both at the state and central level.

Consequently, the private power of employers to unilaterally fix wages, extract overtime, determine compensation, etc. has substantially increased; returning labour to the colonial precarity of the early twentieth century. We are witness to the burgeoning of an under-consuming majority, high unemployment rates, and a huge workforce of underpaid, overworked, and dehumanized workers – who are often tied down to firms that fail to enhance the size of their operations in order to avail exemptions from crucial labour laws. In dismal times such as these, the tradition of May Day proves even more relevant and potent, especially if we seek to go beyond the smokescreen of India's supposed 'growth' story perpetuated by the ruling dispensation.

கட்டுரை

# வங்கிகள் இணைப்பும் - மக்கள் சேவை பாதிப்பும்

2014ஆம் ஆண்டு பாஜக ஆட்சிக்கு வரும்போது 27 அரசு வங்கிகள் இருந்தன. அவற்றில் ஐடிபிஐ வங்கியை இந்த நிதி ஆண்டிற்குள் முழுமையாக தனியார்மயப்படுத்தும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மற்ற 26 அரசு வங்கிகள் 2017, 2019, 2020ஆம் ஆண்டுகளில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு 12 வங்கிகளாக சுருங்கிவிட்டன. ஆனால் மறுபுறம் ஐடிஎப்சி, பந்தன் வங்கி என்ற 2 வணிக வங்கிகள், 11 பேமண்ட் வங்கிகள், 9 சிறிய தனியார் வங்கிகள் உள்ளிட்ட 22 தனியார் வங்கிகள் 2015-2017 காலகட்டத்தில் துவக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள 12 வங்கிகளில் அதிகபட்சமாக 4 வங்கிகள் மட்டுமே பொதுத்துறையில் நீடிக்கும் என்று ஒன்றிய அரசு பகிரங்கமாக அறிவித்துள்ளது. முதல் கட்டமாக இரண்டு வங்கிகள் தனியார் இரண்டு தனியார்மயமாக்கப்படும் என்று சென்ற ஆண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதை நிறைவேற்றுவதற்கான மசோதா நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படுவதாக இருந்தது. வங்கி ஊழியர்கள், அதிகாரிகளின் இரண்டு நாட்கள் (2021 டிசம்பர் 16, 17) வேலைநிறுத்தம் உள்ளிட்ட தொடர் போராட்டங்களின் விளைவாக அது தள்ளிப் போடப்பட்டுள்ளது.

சாமானிய மக்களுக்கான விவசாயக் கடன், சிறு, குறுந்தொழில் கடன், கல்விக்கடன், சுயஉதவி பெண்கள் குழுக்களுக்கான கடன் என்று கடன் வழங்குவது அரசு வங்கிகள் மட்டுமே. மறுபுறம் புதிய தனியார் வங்கிகளும், சிறிய தனியார் வங்கிகளும் சாமானிய மக்களை கந்து வட்டிக்காரர்களைப் போல் கசக்கிப் பிழிகின்றன. ஆனாலும் அவற்றை ஊக்கப்படுத்தும் வகையில்தான் இந்த அரசு செயல்படுகிறது.

அரசு வங்கிகளையும் தனியார் வங்கிகளைப் போல் மாற்றுவதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது. ஆயிரக்கணக்கான கிளைகள் மூடப்படுகின்றன. தேவையான ஊழியர்கள் நியமிக்கப்படுவதில்லை. சேவைக் கட்டணம் என்ற பெயரில் சாமானிய வாடிக்கையாளர்கள் துன்புறுத்தப்படுகின்றனர். வங்கி டெபாசிட்டுகளுக்கான வட்டி கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. அத்துக்கூலிக்கு ஆட்கள் நியமிக்கப்படுகின்றனர். குறைந்த சம்பளத்தில் வணிக முகவர்கள் மூலம் நிரந்தரப் வங்கிப் பணிகள் செய்யப்படுகின்றன. வங்கிப் பணிகள் வெளியாட்களுக்கு விடப்படுகின்றன. இவற்றையெல்லாம் கைவிட்டு, முறையான நியமனங்கள் மூலம் ஆட்களை நியமித்து அரசு வங்கிகளை பலப்படுத்த வேண்டும். தற்போதுள்ள வெளிப்பணியாளர்கள், முகவர்கள், தினக்கூலிகள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று தொழிற்சங்க இயக்கம் தொடர்ந்து போராடி வருகிறது.

அரசு புள்ளிவிவரத்தின்படியே 2020 மே மாதம் முடிய நான்காண்டுகளில் ரூபாய் 4.3 லட்சம் கோடி வாராக்கடனுக்காக 221 வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டன. இதில் 2.29 லட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. இதில் 7 பெரு நிறுவனங்களுக்கு மட்டும் 1 லட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது Bad Bank என்ற ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டு, 500 கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கி திருப்பிக் கட்டாத பெரு நிறுவனங்களின் கடன் ரூ.2 லட்சம் கோடி வரை தள்ளுபடி செய்ய ஏற்பாடு செய்கிறது ஒன்றிய அரசு. கார்ப்பரேட் வாரக் கடன்களை முழுமையாக வசூல் செய்ய வேண்டும். வசதி இருந்தும் திருப்பி செலுத்தாத

கடனாளிகள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் ஆகியவற்றிற்காக சிறப்புச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் போராடி வருகின்றன.

2014இல் மோடி அரசு ஆட்சிக்கு வரும்போது அரசு வங்கிகளின் மொத்த வாரக் கடன் ரூ.2 லட்சத்து 16 ஆயிரம் கோடி. இந்த 7 ஆண்டு காலத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ.6 லட்சம் கோடிக்கு மேல். அதற்குப் பிறகும் தற்போதுள்ள வராக் கடன் ரூ.10.72 லட்சம் கோடியைத் தொட்டுள்ளது. இவ்வராக் கடனில் சுமார் 90 சதவீதம் அளவிற்கு பெருங் கடனாளிகளால் ஏற்படுத்தப்பட்டது. சாமானிய மக்களுக்கு வழங்கப்படும் விவசாயக் கடன், குறுந்தொழில் கடன், கல்விக்,கடன், பெண்களுக்கான சுயஉதவிக் குழு கடன் ஆகியவற்றால் ஏற்படும் வராக் கடன் ஒட்டுமொத்த வராக் கடனில் 2 சதவீதம் கூட கிடையாது.

2020 நவம்பர் மாதம் ரிசர்வ் வங்கி வெளியிட்ட கொள்கை அறிவிப்பின்படி பெரிய கார்ப்பரேட் தொழில் நிறுவனங்கள் வங்கிகள் துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதிக்கப்பட்டால் அத்தொழில் நிறுவனங்கள் தங்களுக்குள்ளேயே கடன் கொடுத்துக்கொள்வார்கள். மக்கள் நலனைப் புறக்கணிப்பார்கள். இதுதான் 1969க்கு முன்னால் நமது அனுபவம். எனவே தான் 1969 ஜூலை 19 ஆம் நாள் 14 பெரிய தனியார் வங்கிகள் அரசுடமையாக்கப்பட்டன. இருந்தும் வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள மறுக்கின்ற ஒன்றிய அரசு அதே பாதையில் பணயிக்க எத்தனிக்கிறது.

2016இல் பாஜக அரசு கொண்டு வந்த சட்டத்தின் மூலமாக கிராம வங்கிகளின் பங்குகளில் 49 சதவீதம் வரை தனியாரிடம் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைக்கு கிராம வங்கிகள்தான் கிராமப்புற, ஏழை, எளிய மக்களுக்கான கடன் வழங்குவதில் முன்னணியில் நிற்கின்றன. 22,000 கிளைகளைக் கொண்ட 43 வங்கிகள் நாடெங்கிலும் உள்ள 650க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் திறம்படச் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகளின் பங்குகளை தனியாருக்கு விற்றால் எந்த நோக்கத்திற்காக 1976இல் இவ்வங்கிகள் உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கம் முற்றிலுமே சிதைந்துவிடும். தற்போது முதல் கட்டமாக ஒன்றிய அரசின் பங்குகளை ஸ்பான்ஸர் வங்கிகளிடம் கொடுக்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

2020 ஆம் ஆண்டு வங்கிகள் ஒழுங்கமைப்புச் சட்டத்தில் சில திருத்தங்களை கொண்டு வந்ததன் மூலமாக இந்திய அரசாங்கம் கூட்டுறவு வங்கிகளை மாநில அரசின் கட்டுப்பாட்டிலிருந்து நேரடியாக ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டுக்கு எடுத்துச் சொன்று விட்டது. மேலும், நகர கூட்டுறவு வங்கிகளை சிறிய தனியார் வங்கிகளாக மாற்றுவதற்கான முயற்சியிலும் ஒன்றிய அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஆக ஒட்டுமொத்தமாக கூட்டுறவு வங்கிகளின் மக்களுக்கான மகத்தான சேவையை முடக்கும் விதத்தில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

புதிய ஓய்வூதியத் திட்டம் ஓர் ஏமாற்றுத் திட்டமாக உள்ளது. அதில் உத்தரவாதமான ஓய்வூதியம் கிடையாது, பஞ்சப்படி கிடையாது. எனவே உத்தரவாதமான பழைய ஓய்வூதியத் திட்டத்தை அனைவருக்கும் நீட்டிக்க வேண்டும், அனைவருக்கும் ஓய்வூதிய அப்டேஷன் வழங்கப்பட வேண்டும் என்று கடந்த பல வருடங்களாக வங்கி சங்கங்களின் கூட்டமைப்பு போராடி வருகிறது.

**இரா.மங்களபாண்டியன்**
மாநிலத் துணைத் தலைவர்

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.

## TNROA சார்பில் 23.03.2023 ஒட்டுமொத்த தற்செயல் விடுப்புப் போராட்டம் குறித்து நிர்வாகிகள் பரப்புரை



செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர் தோழர். மணிகண்டன் பிரச்சாரம்



ராணிப்பேட்டை மாவட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர் தோழர். ஆர்.எஸ்.ராஜகோபால் பிரச்சாரம்



விருதுநகர் மாவட்டம் சாத்தூர் வட்டத்தில் மாநில செயலாளர் தோழர். எம்.சுப்பு பரப்புரை

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
April 2023

**Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17**
**RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002**



சிவகங்கை மாவட்டத்தில் மாநில செயலாளர் தோழர் தமிழரசன் பரப்புரை

Publishing Date 3rd Week of Every Month
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TNPMG (CCR) / WPP. 3 / 2015-2017

பெறுநர் :
திரு / திருமதி



திருவாரூர் வருகைத் தந்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களை 15.3.23 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சந்தித்து TNROA மாநில மற்றும் மாவட்ட மைய கோரிக்கைகள் வழங்கப்பட்டது. நினைவு பரிசாக TNROA நாட்குறிப்பும் வழங்கப்பட்டது.

If undelivered Please Return to :
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்,
பழைய எண். 30/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005



**Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.**